# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1793 - 2013 ජනවාරි මස 11 වැනි සිකුරාදා - 2013.01.11

*1793 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமுலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | 14 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, சனவரி மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ.எச்.எல்.வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள்

**கடுவெல மாவட்ட நீதிமன்றம்**

சிவில் வழக்கு சட்டக் கோவையின் 16 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்

1. சத்தாதிஸ்ஸ அபேசிங்க குணவர்த்தன,
இல. 146/6ஏ, துட்டுகெமுவ வீதி,
கொஹுவெலை மற்றும் இல. 1/1,
ரத்நாயக்க மாவத்தை, பெலவத்தை.

2. சந்திரிக்கா பிரியதர்சனி குணவர்த்தன,
(திருமணத்துக்கு முன்னர் விஜேவர்த்தன),
இல. 146/6ஏ, துட்டுகெமுவ வீதி,
கொஹுவெலை மற்றும் இல. 1/1,
ரத்நாயக்க மாவத்தை, பெலவத்தை.

............... வழக்காளிகள்.

வழக்கு இல. : 409/L
தன்மை : காணி
நடைமுறை : பொது
பெறுமதி : 1,500,000/-

எதிராக

1. சோமவங்ச அமரசிங்க,
தலைவர்,
மக்கள் விடுதலை முன்னணி,
இல. 464/20, பேங் ஹில் ஸ்டேட்,
பெலவத்தை, தலங்கம தெற்கு,
பத்தரமுல்ல.

2. மெஸ்திரிகே டில்வின் சில்வா,
செயலாளர்,
மக்கள் விடுதலை முன்னணி,
இல. 464/20, பேங் ஹில் ஸ்டேட்,
பெலவத்தை, தலங்கம தெற்கு,
பத்தரமுல்ல.

3. அநுர திசாநாயக்க,
நிதிச் செயலாளர்,
மக்கள் விடுதலை முன்னணி,
இல. 464/20, பேங் ஹில் ஸ்டேட்,
பெலவத்தை, தலங்கம தெற்கு,
பத்தரமுல்ல.

மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்களுக்காக மற்றும் அவர்கள் சார்பாக.

................. எதிராளிகள்.

மேற்படி 1, 2, 3, ஆம் எதிராளிகளுக்காக, இவ் வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக கடுவலை மாவட்ட நீதிபதி டீ. எப். எச். குணவர்த்தன அவர்கள் முன்னிலையில் அழைக்கப்பட்ட போது வழக்காளிகளின் பிராது, சத்தியக் கூற்று மற்றும் ''வ1'' தொடக்கம் ''வ45அ'' வரையிலான அனைத்து இணைப்புக்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின் மற்றும் வழக்காளிகள் சார்பாக புரியப்பட்ட எடுத்துரைப்புகளுக்கு செவிமடுத்த பின்னர் திருப்தி கொண்டு கீழ் காணும் வகையில் கட்டளையை 2012, திசெம்பர் 17 ஆந் திகதி பிறப்பிக்கப்பட்டது.

"சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூற்றுகளுக்கு கவனம் கொள்கின்றேன். அது குறித்து திருப்தி கொள்கின்றேன். இதன்படி ஆரம்ப கட்டத்தில் பிராதில் கோரிக்கையின் ''உ'' பிரிவில் கோரப்பட்டுள்ளதின்படி இடைக்கால தடை உத்தரவு அறிவித்தல் மற்றும் அழைப்பாணை, "எ" பிரிவில் கோரப்பட்டுள்ள படி அறிவித்தலும் பிரசுரிப்பதற்கு அனுமதி வழங்கி கட்டளை இடுகின்றேன். அதன்படி குறித்த அறிவித்தல்களை பிரசுரிப்பவர் லங்கா தீப மற்றும் டெய்லி மிரர் மற்றும் வர்த்தமானி பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட வேண்டும் என அறிவிக்கின்றேன்.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

பதிவாளர்,
கடுவளை மாவட்ட, நீதவான் நீதிமன்றம்.

2012, திசெம்பர் 18.

1-300

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.